மாலைக்கதிர்
Maalaikkathir

யாழ் மண்ணிலிருந்து இணைய வெளிக்கு - Yarl Muttram Youtube Channel



சாயல் - 03 வள்ளுவர் ஆண்டு 2055 தை 16 புதன்கிழமை 29.01.2025 கதிர் 111

# சாவகச்சேரியில் வைத்து அர்ச்சுனா எம்.பி. கைது!

## அனுராதபுரம் பொலிஸார் அதிரடி நடவடிக்கை



**சாவகச்சேர், ஜன 29**

**யாழ்ப்பாணம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் வைத்தியர் இராமநாதன் அர்ச்சுனா சாவகச்சேரியில் வைத்து இன்று பிற்பகல் அனுராதபுரம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.**

கடந்த வாரம் அனுராதபுரம் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் போக்குவரத்து விதிமுறைகளை மீறியமை, கடமையில் இருந்த பொலிஸாரின் கடமைக்கு இடையூறு விளைவித்தமை உள்ளிட்ட குற்றச்சாட்டுக்கள் இராமநாதன் அர்ச்சுனா எம்.பி. மீது சுமத்தப்பட்டிருந்தன.

இந்நிலையில் அனுராதபுரம் நீதிவான் நீதிமன்றில் இராமநாதன் அர்ச்சுனா எம்.பி. முன்னிலையாகிய வேளை, சந்தேகநபர் சுலோச்சனா இராமநாதன் எனப் பெயர் குறிப்பிட்டு இருந்தமையால் அர்ச்சுனா விடுவிக்கப்பட்டிருந்தார்.

குறித்த வழக்கு தொடர்பில் எதிர்வரும் 3ஆம் திகதி விசாரணை அறிக்கையை மன்றில் சமர்ப்பிக்குமாறு அனுராதபுரம் நீதிவான் நீதிமன்றம் பொலிஸாருக்குக் கட்டளையிட்டிருந்தது.

இந்நிலையில், அனுராதபுரம் பொலிஸ் நிலையத்தின் விசேட குழுவினர் யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்து இன்று சாவகச்சேரியில் வைத்து இராமநாதன் அர்ச்சுனா எம்.பியைக் கைது செய்து அனுராதபுரத்துக்கு அழைத்துச் சென்றுள்ளனர்.

## எதிரணிகள் ஓரணியில்



கொழும்பு, ஜன 29

நாடாளுமன்றத்துக்கு உள்ளேயும் வெளியேயும் மக்கள் குரலை மேலும் மேலோங்கச் செய்து, வலுவான எதிர்க் கட்சியைக் 7 ▶

## அமெரிக்கா பறந்த பஸில் மே மீண்டும் இலங்கைக்கு



கொழும்பு, ஜன 29

அமெரிக்கா சென்றுள்ள முன்னாள் அமைச்சர் பஸில் ராஜபக்ஷ, எதிர்வரும் மே மாதம் நாடு திரும்புவார் என்று மஹிந்த ராஜபக்ஷ குடும்ப உறுப்பினரான உதயங்க 7 ▶

## கைதான இந்திய மீனவர்களுக்கு மார்ச் 10 ஆம் திகதி வரை மறியல்



காங்கேசன்துறை, ஜன 29

இலங்கைக்கடற்பரப்பினுள் அத்துமீறி நுழைந்து மீன்பிடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் கைதான 13 இந்திய மீனவர்களில் 11 பேரை எதிர்வரும் 10ஆம் திகதி வரையில் விளக்கமறியலில் 7 ▶

## 40 ஆயிரம் போதை மாத்திரைகளுடன் யாழ்ப்பாணத்தில் 5 இளைஞர்கள் கைது



யாழ்ப்பாணம், ஜன 29

யாழ்ப்பாணத்தில் 40 ஆயிரம் போதை மாத்திரைகளுடன் ஐந்து இளைஞர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணம் பொலிஸ் புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைக்கப் பெற்ற இரகசியத் தகவலின் அடிப்படையில் நடத்தப்பட்ட சுற்றிவளைப்பு நடவடிக்கையின்போது ஐந்து இளைஞர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அவர்களிடம் இருந்து 40 ஆயிரம் போதை மாத்திரைகள் மீட்கப்பட்டுள்ளன.

கைது செய்யப்பட்ட ஐந்து இளைஞர்களையும் பொலிஸ் காவலில் தடுத்து வைத்து பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

## உடுப்பிட்டி மதுபானசாலைக்கு எதிரான வழக்கு பருத்தித்துறை நீதிமன்றால் மீண்டும் ஒத்திவைப்பு

உடுப்பிட்டி, ஜன 29


உடுப்பிட்டியில் மக்களின் எதிர்ப்பை மீறித் திறக்கப்பட்ட மதுபானசாலைக்கு எதிரான வழக்கு எதிர்வரும் மார்ச் 6 ஆம் திகதிக்குப் பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றத்தால் ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

உடுப்பிட்டி , இமையாணன் மேற்கில் புதிதாகத் திறக்கப்பட்ட மதுபான சாலையை அகற்றக் கோரி அப் பகுதியைச் சேர்ந்த 32 பொது 7 ▶



- பக்கம் சாராச் செய்திகளுடன் மக்களுக்கான மாலை இதழ் -

# அமைதிக்கான நோபல் பரிசை வென்றிருப்பார்



கொழும்பு, ஜன 29

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ விடுதலைப் புலிகளுடன் புரிந்துணர்வு உடன்படிக்கையில் கைச்சாத்திட்டிருந்தால் அமைதிக்கான நோபல் பரிசை வென்றிருப்பார், ஆனால் அவர் செய்ய வேண்டியதைச் செய்ததாக ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன பாராளுமன்ற உறுப் பினர் நாமல் ராஜபக்ஷ இன்று தெரிவித்துள்ளார். .

“விடுதலைப் புலிகளை நசுக்கியதற்காக நாமும் எங்கள் பரம்பரையும் கூட கஷ்டப்பட வேண்டியிருக்கும் என்ற உண்மையை நாங்கள் ஆரம்பத்தில் இருந்தே அறிந்திருந்தோம்” என்று எம்.பி. ராஜபக்ச ஊடகங்களுக்குத் தெரிவித்தார்.

எத்தகைய சவால்களை எதிர்கொண்டாலும் நாங்கள் எமது அரசியலைத் தொடர்வோம் என அவர் மேலும் தெரிவித்தார். (ஐ)

## இன்று முதல் விசேட போக்குவரத்துத் திட்டம்



மட்டக்களப்பு , ஜன 29

சுதந்திர சதுக்கத்தை அண்மித்த பகுதிகளில் இன்று முதல் விசேட போக்குவரத்துத் திட்டம் அமுல்படுத்தப்படுகிறது.

இலங்கையின் 77ஆவது தேசிய சுதந்திர தினத்தை கொண்டாடுவதற்கான ஒத்திகைகள் காரணமாக இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதன்படி, குறித்த பகுதியில் இன்று முதல் பெப்ரவரி மாதம் 2ஆம் திகதி வரை காலை 8 மணி முதல் நண்பகல் 12 மணி வரை விசேட போக்குவரத்துத் திட்டம் அமுல்படுத்தப்படவுள்ளதாக பொலிஸ் போக்குவரத்துப் பிரிவு தெரிவித்துள்ளது.

இதன்படி, கருவாத்தோட்டம் - விஜேராம மாவத்தையிலிருந்து வித்யா மாவத்தைக்கான நுழைவாயில், பௌத்தாலோக மாவத்தையிலிருந்து மைட்லேண்ட் பிளேஸ்'க்கான நுழைவாயில், ஸ்டான்லி விஜேசுந்தர மாவத்தையிலிருந்து இலங்கை மன்ற கல்லூரி வீதிக்கான நுழைவாயில் ஆகி யன தற்காலிகமாக மூடப்படவுள்ளது.

அத்துடன் ஒத்திகை காலத்தில் ஹோரட்டன் பிளேஸில் இருந்து சுதந்திர சதுக்கம் ஊடான மைட்லேண்ட் பிளேஸ்'க்கான நுழைவாயில் மூடப்படும் என தெரிவித்துள்ளது. (ஐ)

## கசிப்பு தயாரிப்பு நிலையம் சுற்றிவளைப்பு



மட்டக்களப்பு , ஜன 29

மட்டக்களப்பு கொக்கட்டிச்சோலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மண்முனை பிரதேச வாலியை அண்டிய அடர்ந்த காட்டுப் பகுதியில் நீண்ட காலமாக இயங்கி வந்த கசிப்பு தயாரிப்பு நிலையம், மட்டக்களப்பு மாவட்ட குற்ற விசாரணைப் பிரிவினரால் செவ்வாய்க்கிழமை (28) மாலை சுற்றி வளைக்கப்பட்டுள்ளது.

இதன் போது 23 பரல்களில் சுமார் 14 லட்சத்து 50 ஆயிரம் மில்லி லிட்டர் கோடா , 750 போத்தல்களில் 5,25,000 மில்லி லிட்டர் கசிப்பு , கசிப்பு தயாரிப்புக்காக பயன்படுத்தப்படும் பெருமளவிலான உபகரணங்கள் மற்றும் தோனியொன்று கைப்பற்றப்பட்டது.

சந்தேக நபர்கள் தப்பியோடியுள்ள நிலையில் அவர்களை கைது செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

## பஸ் மீது யானை தாக்குதல்

திருகோணமலை , ஜன 29

திருகோணமலையில் இருந்து கல்முனை நோக்கி பயணிகளை ஏற்றிச் சென்ற தனியார் பஸ் வண்டி ஒன்றின் மீது யானை தாக்கிய சம்பவம் கோறளைப்பற்று மத்தி வாழைச்சேனை பிரதேச செயலகம் அமைந்துள்ள கொழும்பு பிரதான வீதியில் செவ்வாய்க்கிழமை இரவு இடம்பெற்றுள்ளது.

தாக்குதலில் பஸ் வண்டியின் முன் பகுதி சேதமடைந்துள்ளதாக தெரியவந்துள்ளது.

சில நாட்களாக மக்கள் குடியிருப்புப் பகுதிக்குள் மூன்று யானைகள் உட்புகுந்து அட்டகாசம் புரிந்து வருவதாகவும் இதனால் அப்பகுதி மக்கள் தினந்தோறும் அச்சத்துடன் வாழ்ந்து வருவதாகவும் தெரிவிக்கப பட்டுள்ளது.

குடியிருப்பு பகுதிக்குள் உட்புகுந்துள்ள யானைகளை காட்டுப் பகுதிக்குள் விரட்டும் முயற்சிகளை கல்குடா அனர்த்த அவசர சேவைகள் உறுப்பினர்கள் முன்னெடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## அபிவிருத்தி குறித்து அமைச்சர் ஆய்வு



கைத்தொழில் மற்றும் தொழில்முனைவோர் அபிவிருத்தி அமைச்சர் சுனில் ஹந்துநெத்தி நில்வள நதியை சுற்றுலா மற்றும் போக்குவரத்து நோக்கங்களுக்காக பயன்படுத்துவதற்கான சாத் தியக கூறுகளை ஆராய்வதற்காக ஆய்வுப் பயணத்தில் ஈடுபட்டுள்ளார்.

அதன்படி, நில்வள ஆற்றின் பாதுகாப்பு மற்றும் அபிவிருத்தி தொடர்பில் அவர் தலைமையிலான மாத்தறை மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவில் எடுக்கப்பட்ட தீர்மானத்தின் பிரகாரம் இந்த நடவடிக்கைகள் எடுக கப்பட்டுள்ளன.

ஆற்றங்கரையோரத்தில் ஏற்பட்டுள்ள வெள்ளப்பெருக்குக்கு விரைவான தீர்வு காண்பது குறித்தும் இந்த விஜயம் கவனம் செலுத்துவதாக அவர் கூறினார்.

நிலவள கங்கை அபிவிருத்தி தொடர்பில் எடுக்கப்பட்ட சில முக்கிய தீர்மானங்கள்

தொழில்நுட்பக் குழு மூலம் வெள்ளப் பிரச்னைக்கு விரைவான தீர்வு காணல்

சரக்கு மற்றும் பயணிகள் போக்குவரத்திற்கு நில்வள கங்கையைப் பயன்படுத்துதல்

நில்வள ஆற்றின் ஊடாக சுற்றுலாத துறையின் அபிவிருத்தி

அக்குரஸ்ஸ ஊடாக சிங்கராஜா வனப்பகுதிக்கு சுற்றுலாப் பயணிகளின் போக்குவரத்து

ஆற்றின் கரைகள் அரிப்பைத் தடுப்பதற்கான நடவடிக்கைகள்

ஆற்றில் உள்ள குப்பைகள் மற்றும் கழிவுகளை விரைவாக அகற்றுதல். (ஐ)

## பரீட்சார்த்திகளின் கவனத்திற்கு




மட்டக்களப்பு , ஜன 29

2024(2025) கல்விப் பொதுத்தராதர சாதாரண தரப் பரீட்சைக்கான கால அட்டவணையை பரீட்சைகள் திணைக்களம் வெளியிட்டுள்ளது.

அதன்படி, மார்ச் 17 ஆம் திகதி முதல் மார்ச் 26 ஆம் திகதி வரை பரீட்சை நடைப்பெறும்.

இந்தப் பரீட்சைக்கான கால அட்டவணையை, றறற.னழநநெவள.டம என்ற வலைத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்து கொள்ளலாம் என பரீட்சைத் திணைக்களம் தெரிவித்துள்ளது (ஐ)



# அரசாங்கத்தின் முயற்சிக்கு அரசியலமைப்பு தடை போடுகிறது

கொழும்பு, ஜன 29

முன்னாள் ஜனாதிபதிகளின் சலுகைகள் மற்றும் பலன்களை துண்டிப்பதற்கான அரசாங்கத்தின் நடவடிக்கைக்கு அரசியலமைப்பு தடையாக உள்ளதாக, இது குறித்து ஆராய நியமிக்கப்பட்ட குழு அவதானித்துள்ளதாக தகவலறிந்த வட்டாரம் தெரிவித்துள்ளது.

ஜனாதிபதி அனுரகுமார திஸாநாயக்க கடந்த ஆண்டு தேர்தல் பிரச்சாரத்தின் போது வாக்குறுதியளித்தபடி, ஆட்சியில் சிக்கனத்தை கடைப்பிடிக்கும் முயற்சியில் பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் முன்னாள் அரச தலைவர்களின் சலுகைகள் மற்றும் நன்மைகளை குறைப்பதற்கான சாத்தியக்கூறுகளை ஆராய்வதற்காக ஒரு குழுவை நியமித்தார்.

எவ்வாறாயினும், முன்னாள் அரச தலைவர்களுக்கான ஓய்வூதியம் போன்ற சில சலுகைகளை அரசியலமைப்பைத் திருத்தம் செய்யாமல் குறைக்கவோ அல்லது அகற்றவோ முடியாது என்று குழு கண்டறிந்துள்ளது.

"ஜனாதிபதியின் பதவியை ஏற்றுக்கொண்டவுடன், அத்தகைய பதவியை வைத்திருப்பவர் அத்தகைய சம்பளம் மற்றும் கொடுப்பனவுகளைப் பெறுவதற்கும், அதன் பிறகு, பாராளுமன்றத்தால் தீர்மானிக்கப்படும் ஓய்வூதியத்தைப் பெறுவதற்கும் தகுதியுடையவராவார். இந்த உறுப்புரையின் எந்தவொரு திருத்தம், ரத்து அல்லது மாற்றுதல் மற்றும் இந்த உறுப்புரைக்கு முரணான எந்தவொரு சட்டமும் அல்லது அதன் விதிகளும் பின்னோக்கி அதற்கு மாறாக செயல்படாது" என அரசியலமைப்பின் பிரிவு 36 (2) கூறுகிறது,

பின்னோக்கிச் செயல்படும் வகையில் ஒரு சட்டத்தை இயற்றுவது அரசாங்கத்திற்கு இலகுவானது அல்ல என்பது இதன் அர்த்தமாகும்.

தவிர, ஜனாதிபதி உரிமைச் சட்டத்தின்படி, முன்னாள் ஜனாதிபதிக்கு வாடகை இல்லாமல் பொருத்தமான வீடுகள் வழங்கப்பட வேண்டும்.

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு ஒதுக்கப்பட்டுள்ள தற்போதைய வீட்டின் வாடகை பெறுமதி அரசாங்க மதிப்பீட்டின்படி 4.6 மில்லியன் ரூபா என அண்மையில் ஜனாதிபதி அநுர குறிப்பிட்டார். இது அரசியல் வட்டாரத்தில் விவாதத்தை ஏற்படுத்தியது. சுகாதார மற்றும் ஊடகத்துறை அமைச்சர் டொக்டர் நலிந்த ஜயதிஸ்ஸ உள்ளிட்ட அரசாங்கத் தலைவர்கள் திரு ராஜபக்ஷவை வீட்டைக் காலி செய்யுமாறு கேட்டுக் கொண்டனர். ராஜபக்ச, அவர் மீது நடவடிக்கை எடுக்க எழுத்துப்பூர்வமாக கோரிக்கை முன்வைக்குமாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் கருத்து கேட்ட போது, பொது பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால, அரசியலமைப்பின் பிரகாரம், முன்னாள் ஜனாதிபதிகளின் ஓய்வூதியம் போன்ற சில நன்மைகளை உடனடியாக கத்தரித்து விட முடியாது எனவும், இதற்காக ஜனாதிபதியினால் நியமிக்கப்பட்ட குழு தனது அறிக்கையை சமர்ப்பித்துள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

எவ்வாறாயினும், பாராளுமன்ற உறுப்பினர்களுக்கான ஓய்வூதியத்தை குறைப்பதற்கு அத்தகைய தடை இல்லை என்று அவர் கூறினார்.

"30,000 சதுர அடிக்கு மேல் உள்ள தற்போதைய குடியிருப்புக்கு பதிலாக திரு. ராஜபக்சவுக்கு பொருத்தமான வீடுகளை வழங்குவதாக ஜனாதிபதி உறுதியளித்துள்ளார்," என்று அவர் கூறினார். (ஐ)

# கைத்தொலைபேசி பயன்பாட்டை தடுக்க புதியதொரு தீர்மானம்



கொழும்பு, ஜன 29

தொலைத்தொடர்பு ஒழுங்குமுறைஆணையத்தால; (TRC) அங்கீகரிக்கப்படாத கைத்தொலைபேசிகளின் பயன்பாட்டைக் கண்டறிந்து அதனை தடுப்பதற்கான புதிய மென்பொருளை அறிமுகப்படுத்த, தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

எதிர் காலத்தில் தொலைத்தொடர்பு ஒழுங்குமுறை ஆணையத்தின் அனுமதியின்றி எந்தவொரு கைத்தொலைப்பேசியும் வாங்க வேண்டாம் என ஆணையம் பொது மக்களை வலியுறுத்துகின்றது.

மேலும், அங்கீகரிக்கப்படாத தொலை பேசி பயன்பாட்டை தடுக்க, தொலைத்தொடர்பு ஆணையம் விரைவில் ஒரு புதிய தானியங்கி அமைப்பை செயல்படுத்தும் என ஆணையத்தின் பணிப்பாளர் நாயகம் பந்துல ஹேரத் தெரிவித்துள்ளார் (ஐ).



# மிதி வெடி

யாழ்ப்பாணத்தில உள்ள பிரபலமான பாடசாலை ஒன்று. இந்துக்களுக்கு சிறப்பானது.

இப்ப அங்க ஒரு பிள்ளைக்கு "அட்மிசன்" எடுக்கிறதெண்டாக் கட்டாயம் "ஸ்கொலசிப்" "பாஸ்" பண்ணியிருக்க வேணும். வேறெந்தச் செல்வாக்கும் வேலை செய்யாது.

இப்ப ஒரு அஞ்சாறு வருசத்துக்கு முன்னம் அந்தக் கல்லூரியில பிள்ளையளை அனுமதிக்கிறதெண்டா கையில நல்ல காசு இருந்தால் மட்டும் போதும் அடுத்தடுத்த வருசங்களில "சிப்பிள்"ஆ "அட்மிஷன்" கிடைக்கும்.

இப்ப அங்க கிட்டவும் நெருங்கேலா... எல்லாம் சட்டப்படி தான்... "அட்மிஷன்" மட்டுமில்ல அத்தனையும் "பேர்பெஃக்ட்".

ஆனா, அந்தக் கல்லூரியின்ர சின்னப் பள்ளிக்கூடம் இண்டைக்கு வரைக்கும் திருந்திற மாதிரியில்லை. என்னதான் நீங்க "நல்லாட்சி" எண்டு சொன்னாலென்ன, "ஊழலற்ற" ஆட்சி எண்டு சொன்னாலென்ன, ஆட்சியில நடந்த மாற்றம் அங்க இல்லப் பாருங்கோ....

முந்தின காலத்தில "லொறி"க் கணக்கில மணல் பறிச்சு விட்டால் "அட்மிஷன்" கிடைச்சது. தின்னவேலி, கந்தர்மடம், அச்சுவேலி எண்டு கட்டுக்கட்டாக் காசு வாங்கினவை, புதுசா வந்தவர் திருந்தியிருப்பார் எண்டு பாத்தா அதுவும் இல்ல....

காசு தான் எல்லாம் பாருங்கோ... "தனம்" மனம் வைச்சாத்தான் எல்லாமாம். முந்தி கொக்குவில் பள்ளிக்கூடத்தில "அட்மிஷன்" வேணுமெண்டா... யாழ்ப்பாணத்தில இருக்கிற மணிக்கூட்டுக் கடையில "செற்றில்மென்ற்" செய்தது ஒரு காலம்... அங்கயிருந்து இங்க வந்த பிறகும் - இப்பவும் வசூலிப்பு நல்லா நடக்குதாம்...

"செற்றில்மென்ற்"ஐப் பொறுத்துத் தான் "லிஸ்ற்"ல பேர் போடுப் படுமாம்....

"அட்மிசன்" நேரத்தில ஒவ்வொரு பிள்ளைக்கும் "மார்க்ஸ்" போட்டுட்டு அதில இவ்வளவு தான் போட்டிருக்குது எண்டு பெற்றோரும் கையெழுத்து வைக்க வேணுமாம்...

போன மாசம் பிள்ளையளுக்கும், பெற்றோருக்குமா நடத்தின "இன்ரவியூ" முடிச்சுப் போட்டு, அதன் படி 80 "மார்க்ஸ்" விழுந்த பிள்ளை ஒண்டுக்கு "டிபார்ட்மென்ற்" க்கு அனுப்பின "லிஸ்ற்" ல 72 "மார்க்ஸ்" போட்டு அனுப்பியிருக்கினமாம்.

தன்ர பிள்ளைக்குப் பின்னுக்கு நிண்ட பிள்ளையள் தெரிவு செய்யப்பட்டு பட்டியலலில பேர் வந்திருந்ததால போய்க் கேட்ட தகப்பன் ஒராளுக்கு முந்திப் போட்ட 80 "மார்க்ஸ்" இப்ப "டிப்பாற்மென்ற்"காரர் மறுபரசீலனை செய்ததுக்குப் பிறகு 65ஆ மாத்துப்பட்டிருக்குதாம்.

ஏற்கனவே போட்ட "மார்க்ஸ்"கு பெற்றாரிட்டை காட்டி விண்ணப்பத்தில கையெழுத்து வாங்கேல்ல எண்டு சட்டம் கதைச்சதால தானாம், அவருக்கு "ஆய" கலைகள் அத்தனையும் தெரிஞ்ச "டிப்பாற்மென்ற்"காரர் "மார்க்ஸ்" குறைச்சவராம்....

"தன" ரீதியா செல்வாக்குக் காட்டாமல் விட்டதால "லிஸ்ற்"ல இல்லாட்டியும், "வெயிற்றிங்"ல பேர் இருந்ததாம், நான் பெரிசா - நீ பெரிசா எண்டு "கெத்து"க் காட்டினதால இப்ப இருந்த 72 ம் 65 ஆப் போச்சுதெண்டு அந்தத் தகப்பன் புலம்பித்திரியிறார்.

தனக்குப் போட்ட அத்தனை புள்ளிக்கும் கணக்குக் காட்ட வேணும் எண்டு இப்ப மனித உரிமை ஆணைக்குழுவின்ர வாசலில போய் நிக்குதாம் அந்த மனுசன்....

பாத்தியளோ பஞ்சாயத்தை....?

"தனம்" இருந்தாலும் பலனில்லை... "ஆய" கலைகள் அத்தனையையும் அறிஞ்சும் இருக்க வேணும்.....

இல்லாட்டில் அத்தனையையும் பொத்திக் கொண்டு இருக்க வேணும்.... சட்டம் கதைச்சியளோ... நடக்கிறது உது தான் எண்டு அதிபரில இருந்து அதிகாரி வரையும் சொல்லாமல் சொல்லுகினம்....?

அதாவது பாருங்கோ 'யாகாவ ராயினும் நாகாக்க காவாக்கால் சோகாப்பர் சொல்லிழுக்குப் பட்டு'

–நரமுனி–

# வைத்தியரின் கவனக்குறைவால் மூதாட்டி மரணம்–வெளியானது சி.சி.டி.வி ஆதாரம்!




உத்தரபிரதேச மாநிலம் மெயின்புரி மாவட்ட மருத்துவமனையில் பணியில் இருந்த மருத்துவர் சிகிச்சை அளிக்காமல் கையடக்கத் தொலைபேசியில் ரீல்ஸ் பார்த்து கொண்டிருந்ததால் மூதாட்டி ஒருவர் உயிரிழந்த சம்பவம் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

நேற்று மதியம் மெயின்புரி மாவட்ட மருத்துவமனையில் மாரடைப்பு ஏற்பட்டதாக அனுமதிக்கப்பட்ட பிரவேஷ் குமாரி என்ற 60 வயது மூதாட்டி அடுத்த 15 நிமிடங்களில் உயிரிழந்தார்.

அப்போது பணியில் இருந்து மருத்துவர் ஆதர்ஷ் சங்கர், நோயாளியை கவனிக்காமல் தனது கையடக்கத் தொலைபேசியில் ரீல்ஸ் பார்த்து கொண்டிருந்ததாகவும் நோயாளியை கவனிக்க செவிலியரை அனுப்பியதாகவும் அவரது குடும்பத்தினர் குற்றம் சாட்டியுள்ளனர். மேலும், நோயாளியின் உடல்நிலை மோசமடைந்ததை தொடர்ந்து அவரது மகன் குரு ஷரன் சிங் கூச்சலிட்டு போராடியுள்ளனர். அப்போது மருத்துவர் ஆதர்ஷ் சங்கர், குரு ஷரன் சிங்கை அறைந்தால் மருத துவமனையில் சலசலப்பு ஏற்பட்டது. இதனையடுத்து மருத்துவமனைக்கு வந்த பொலிஸார் நிலைமையை கட்டுக்குள் கொண்டு வந்தனர்.

இந்த சம்பவம் தொடர்பான சிசிடிவி காட்சிகள் வெளியாகி பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. இது தொடர்பாக பேசிய மருத்துவமனையில் தலைமை மருத்துவர் மதன் லால், “இந்த சம்பவம் தொடர்பாக விசாரணை நடத்துவதாகவும் மருத்துவர் சங்கர் கவனக்குறைவாக இருந்தது கண்டறியப்பட்டால் கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் தெரிவித்தார்.

# சக மாணவியை பாலியல் வன்கொடுமை செய்ய ரூ.100 கொடுத்த ஏழாம் வகுப்பு சிறுவன்!



*மகாராஷ்டிராவில் 7 ஆம் வகுப்பு மாணவியை உடன் படிக்கும் சக மாணவன் பாலியல் வன்கொடுமை செய்து கொலை செய்ய திட்டம் தீட்டிய சம்பவம் வெளிச்சத்துக்கு வந்துள்ளது.*

*மகாராஷ்டிர மாநிலம் புனேவில் டவுண்ட் டெசில் பகுதியில் செயல்பட்டுவரும் செயின்ட். செபாஸ்டின் ஆங்கில வழி தனியார் பாடசாலையில் 2 மாதங்களுக்கு முன் இந்த சம்பவம் நிகழ்ந்துள்ளது. 7 ஆம் வகுப்பு மாணவன் அவனது ரிப்ரோட் கார்டில் திருட்டுத்தனமாகப் பெற்றோரின் கையெழுத்தை போடுவதை அதே வகுப்பில் படிக்கும் சிறுமி பார்த்துள்ளார். இதனை சிறுமி வகுப்பு ஆசிரியையிடம் தெரிவித்துள்ளார்.*

*இதனால் கோபமடைந்த சிறுவன், சிறுமியை பாலியல் வன்கொடுமை செய்து கொலை செய்ய சொல்லி 9 ஆம் வகுப்பு படிக்கும் மாணவன் ஒருவனிடம் அதற்கு கட்டணமாக 100 ரூபாய் கொடுத்துள்ளான். ஆனால் அந்த மூத்த மாணவன் இந்த திட்டத்தை பாடாசலை நிர்வாகத்திடம் தெரியப்படுத்தியுள்ளான்.*

*தகவலறிந்த சிறுமியின் பெற்றோர்கள் பல முறை இதுகுறித்து நடவடிக்கை எடுக்க பாடாசலை நிர்வாகத்திடம் முறையிட்டுள்ளனர்.*

*ஆனால் இதை நிர்வாகம் மூடி மறைக்க முயன்றுள்ள நிலையில் இதனால் பெற்றோர் கடந்த நவம்பர் 23 ஆம் திகதி பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளனர்.*

*நீண்ட தாமதத்திற்கு பின் கடந்த ஞாயிற்றுக்கிழமை பொலிஸார் குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்துள்ளனர்.*

*சிறார் நீதிச் சட்டம் பிரிவு 75 உள்ளிட்ட பிரிவுகளின்கீழ் விடயத்தை மறைக்க முயன்ற தலைமையாசிரியர் மற்றும் 2 ஆசிரியர்கள் மீது வழக்குப்பதிவு செய்யப்பட்டுள்ளது.*

*கொலைக்கு திட்டம் தீட்டிய சிறுவனுக்கு இன்னும் 12 வயது ஆகாததாலும், சிறார் நீதிச் சட்டம், 12 வயதிற்குட்பட்ட குழந்தைகளுக்கு எதிரான குற்றவியல் நடவடிக்கையை அனுமதிக்காததாலும் அவனுக்கு எதிராக எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.*

# யமுனை விவகாரத்தில் இரவு 8 மணிக்குள் பதிலளிக்க கெஜ்ரிவாலுக்கு தேர்தல் ஆணையம் உத்தரவு!




யமுனை விவகாரத்தில் இரவு 8 மணிக்குள் பதிலளிக்க வேண்டும்என கெஜ்ரிவாலுக்கு தேர்தல் ஆணையம் உத்தரவு பிறப்பித்துள்ளது.


டெல்லியில் அடுத்த மாதம் சட்டசபை தேர்தல் நடைபெற உள்ளது. இதை முன்னிட்டு ஆம் ஆத்மி கட்சியின் ஒருங்கிணைப்பாளர் அரவிந்த் கெஜ்ரிவால் தீவிர பிரச்சாரம் செய்து வருகிறார்.

இந்நிலையில் அவர் யமுனை நதியில் அரியானா மாநில பாரதீய ஜனதா அரசு நச்சு கலப்பதாக குற்றம் சாட்டி இருந்தார். இதுகுறித்து பாரதீய ஜனதா நிர்வாகி கள் தேர்தல் ஆணையத்தில் புகார் அளித்தனர்.

அதன் பேரில் தேர்தல் ஆணையம் அரவிந்த் கெஜ்ரிவாலுக்கு நோட்டீஸ் அனுப்பி உள்ளது. அதில், இத்தகைய குற்றச்சாட்டுகள் இரு மாநிலங்களுக்கும் இடையேயான உறவை பாதிக்கக்கூடும்.

புகாருக்குரிய ஆதாரங்களுடன் இன்றிரவு 8 மணிக்குள் கெஜ்ரிவால் தனது பதிலை அளிக்க வேண்டும் என குறிப்பிடப்பட்டுள்ளது.

# வெற்றிகரமாக விண்ணில் பாய்ந்த இஸ்ரோவின் 100–வது ராக்கெட்!



இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனமான இஸ்ரோ தனது 100-வது செயற்கைக்கோளை வெற்றிகரமாக விண்ணில் ஏவி சாதனை படைத்துள்ளது.

ஆந்திர மாநிலம், ஸ்ரீஹரிகோட்டாவில் உள்ள சதீஷ் தவான் விண்வெளி ஆய்வு மையத்தில் உள்ள 2-வது ஏவுதளத்தில் இருந்து விண்ணில் ஏவப்பட்ட ஜி.எஸ்.எல்.வி. எப்-15 ராக்கெட் வானை கிழித்துக் கொண்டு புறப்பட்டது.

இந்த ராக்கெட்டுக்கான இறுதிக்கட்டப்பணியான கவுண்ட்டவுன் நேற்று அதிகாலை 2.53 மணிக்கு தொடங்கியது. தொடர்ந்து ராக்கெட் மற்றும் செயற்கைக்கோளின் செயல்பாடுகள் கண்காணிக்கப்பட்டு வந்தது.

இந்த ராக்கெட் சுமந்து செல்லும் என்.வி.எஸ்-02 என்ற செயற்கைக்கோள் புவி சுற்றுப்பாதையில் நிலை நிறத்தப்படுகிறது. இந்த சாதனை விண்வெளி ஆய்வு மற்றும் செயற்கைக்கோள் தொழில்நுட்பத்தில் இந்தியாவுக்கு ஒரு குறிப்பிடத்தக்க படியை உயர்த்தியுள்ளது.

# உலக நாடுகளின் விசித்திர உணவுகள்!





இந்தக் கட்டுரையைப் வாசிக்கும் போது உங்களுக்கு வடிவேலு நடித்த 'ஏய்' பட நகைச்சுவைக் காட்சிதான் நினைவுக்கு வரும்.

காலையில குண்டு பல்ப் , மதியம் டியூப் லைட் என அந்த காட்சியில் வடிவேலுவுடன் நடித்திருப்பவர் சொல்வதைக் கேட்கும் போது நமக்கே விசித்திரமாக இருக்கும்.

இதையெல்லாமா சாப்பிடுவார்கள் ? என ஆச்ச ரியப்பட வைக்கும் 5 உணவுகளைத்தான் இங்கு பார்க்கப்போகிறோம்.

### கற்களை உண்ணும் கசகஸ்தான் மக்கள்

இந்த நாட்டில் உள்ள அனைவரும் இல்லை . ஆனால் பலருக்கு அங்கு கற்களை உண்ணும் பழக்கம் இருக்கிறது. இந்தக் கற்கள் பெரும்பாலும் களிமண்க-ளால் ஆனவை. சிறுவயதில் நாம் சிலேட்டில் எழுதும் குச்சியை சுவைப்பது போல இந்த மக்கள் கற்களை சுவைக்கின்றனர்.

இந்தக் கற்கள் சூப்பர்மார்கெட்களில் பழங்க ளுக்கு அருகில் வைக்கப்பட்டிருக்கின்றன. சிலர் இந்த கற்களை உட்கொள்வதால் இரும்புச் சத்து கிடைப்பதாகக் கரு-துகின்றனர்.

மக்கள் உடலுக்கு நல்லது என நினைத்தாலும் மருத்துவர்கள் கற்களை உண்ணுவதை ஆதரி-க்கவில்லை.

### நூற்றாண்டு முட்டை



அழுகிய முட்டைகள் சீனாவில் பிரபலமாக இருக்கி-றது. இதனை உநவெரசல நபப என அழைக்கின்றனர்.

சாதாரண முட்டையை களிமண், சாம்பல், சுண்ணா-ம்பில் பல மாதங்களுக்கு வைத்து, முட்டை யின் வெள்ளை பழுப்பு நிற ஜெல்லி போன்றும் கரு அடர் பச்சை நிறமாக மாறிய பின்னர் இதனை உண் கின்றனர். இதன் வாசனை மிகவும் மோசமானதாக, சல்ஃபர் அல்லது அமோ-னியா வாசனைப் போன்று இருக்கும் என்கின்றனர்.

### பொரித்த சிலந்தி



கம்போடியாவின் (Skoun) கௌன் நகரில் பெரும பான்மையான மக்கள் பொரித்த சிலந்தியை உண்கின்றனர்.

இந்த சிலந-தி எம்.எஸ்.ஜி, சீனி, உப்பு சேர்ந்த கலவையில் ஊற வைக்கப்பட்டு பூண்டு உடன் பொரித்து பரி மாறப்படுகிறது இதில் வெட்டுக்கிளியை விட அதிகமாக இறைச்சி இருக்குமாம். ஆனால் இதன் வயிற்றுப்பகுதியை சுத்தம் செய்ய முடியாததால் முட்டைகளும் கழிவுகளும் இருக்கும்.



### ஐஸ்லாந்தில் அழுகிய சுறா

கருப்பு சுறா அல்லது கிரீ-ன்லாந்து சுறாக்க ளின் அழுகும் சடலங்களில் இருந்து இந்த உணவு வகைத் தயாரிக்க-ப்படுகிறது.

ஹகர்ல் என அழைக கப்படும் இந்த உணவைச் செய்ய ஒரு ஆழமற்ற குழியைத் தோண்டி அதில் சுறாவைப் புதைக்கின்றனர் . மேலிருந்து அழுத்தம் கொடுக்கும் படி சில கற்களையும் வைக்கின்றனர்.

சுறாவிலிருக்கும் நச்சுத்-தன்மை வாய்ந்த நீர் வெளி-யேறியதும் அதனை எடுத்து தொங்கவிட்டு வெட்டி பறிமா-றுகின்றனர்.

### குளவி குக்கீஸ்



இந்த குளவி குக்கீஸ் மிகவும் விசித்திரமான ஒன்றாகும். இதனை துழையஉாை ஞநடிநை என அழைக்கி-ன்றனர். தண்ணீர், முட்டை, அரிசி மாவு, சீனி , உப்பு, எண்ணெய், எள் மற்றும் சோயா சோஸ் உடன் இந்த குக்கீஸில் குளவியும் இருக்கிறது. பார்க்க சொக்லேட் தூவப்பட்ட ஓரியோ குக்கீஸ் போல இருக்கும்.

# அமெரிக்காவில் கீழே விழுந்து வெடித்துச் சிதறிய விமானம்..!





அமெரிக்காவில் விமானப்படை ஜெட் விமானம் ஒன்று பயிற்சியின்போது கீழே விழுந்து விபத்துக் களாகியுள்ளது.

நேற்று மதியம் அலாஸ்காவின் ஃபேர்பேங்க்ஸ் அருகே அமைந்துள்ள எய்ல்சன் விமானப்படைத் தளத்தில் கு-35 லிக்ஹ்ட்னிங் 2 போர் விமானம் பயிற்சியின் போது விபத்துக்குள்ளானது.

விமானத்தில் ஏற்பட்ட கோளாறு காரணமாக விபத்து ஏற்பட்டுள்ளது. இதுதொடர்பான காணொளி இணையத்தில் வைரலாகி வருகிறது.

பயிற்சியின் போது தரையிறங்கும் சமயத்தில் விபத்து நேர்ந்ததாக எய்ல்சன் விமானப்படை அறிக்கை கூறுகிறது.

இதனால் விமானம் கடுமையான சேதத்தைச் சந்தித்துள்ளது. விமானம் கீழே விழுவதற்கு முன் விமானி அதிலிருந்து எட்ஜெக்ட் ஆகி வெளியே வெளியேறிய குதித்ததால் பாதுகாப்பாக இருப்பதாகவும், பாசெட் இராணுவ மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட டதாகவும் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கு-35 ஒரே நேரத்தில் 12 மணி நேரத்திற்கும் மேலாகப் பறக்கும் திறனுடையது என்பது குறிப்பிடத்தக்கது.

## இஸ்ரேல் பிரதமரை வெள்ளை மாளிகைக்கு அழைத்த அதிபர் டொனால்டு டிரம்ப்!



வெள்ளை மாளிகைக்கு வருமாறு இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நேதன்யாகுவுக்கு அமெரிக்க அதிபர் அதிபர் டொனால்டு டிரம்ப் அழைப்பு விடுத்துள்ளார். இதனை இஸ்ரேல் பிரதமர் அலுவலகம் உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளது . இதனை வெள்ளை மாளிகை அதிகாரியும் உறுதிப்படுத்தியுள்ளார்.

அதன்படி இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நேதன்யாகு அடுத்த வாரம் அதிபர் டிரம்ப்-ஐ வெள்ளை மாளிகையில் வைத்து சந்திக்கவுள்ளார். அமெரிக்க அதிபராக டொனால்டு டிரம்ப் இரண்டாவது முறையாக பதவியேற்றதும் அவரை சந்திக்க அழைப்பு விடுக்கப்பட்டுள்ள முதல் சர்வதேச தலைவர் பெஞ்சமின் நேதன்யாகு தான் என்று இஸ்ரேல் பிரமதர் அலுவலகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளது.

இஸ்ரேல் - ஹமாஸ் இடையிலான போர் நிறுத்தம் அமலுக்கு வந்த பிறகு முதல் முறையாக அதிபர் டிரம்ப் மற்றும் பிரதமர் நேதன்யாகு சந்திக்க உள்ளனர். முன்னதாக போர் நிறுத்தம் தொடர்பாக பல மாதங்கள் வரை பேச்சுவார்த்தைகள் தொடர்ச்சியாக நடைபெற்று வந்தன.

முன்னதாக இஸ்ரேல் தன்னை தற்காத்துக் கொள்ள தேவையான கருவிகளை வழங்கியதற்காக அமெரிக்காவுக்கும் அதன் அதிபர் டொனால்டு டிரம்பிற்கும் பிரதமர் பெஞ்சமின் நேதன்யாகு நன்றி தெரிவித்து இருந்தார்.



## புலம் பெயர்ந்தவர்களை இராணுவ விமானத்தில் அழைத்து வந்த கொலம்பியா அரசு!

அமெரிக்காவில் தங்கி வாழும் சட்டவிரோத புலம் பெயர்ந்தவர்களை இராணுவ விமானத்தில் அழைத்து வந்த கொலம்பியா அரசு தீர்மானித்துள்ளது.

அமெரிக்க அதிபராக பதவியேற்ற டொனால்டு டிரம்ப், நாட்டில் சட்டவிரோதமாக குடியேறியவர்களை வெளியேற்றும் நடவடிக்கைகளை எடுத்து வருகிறார்.

இதில் கொலம்பியாவைச் சேர்ந்த பலரை அமெரிக்க ராணுவ விமானம் மூலம் சொந்த நாட்டுக்கு அமெரிக்கா அனுப்பி வைத்தது. இதற்கு கொலம்பிய அரசு கடும் எதிர்ப்பு தெரிவித்தது. இதையடுத்து கொலம்பியா மீது கூடுதலாக 25 சதவீத வரி விதிக்கப்படும் என்று டிரம்ப் எச்சரித்தார். இதற்கிடையே அமெரிக்க விமானங்களில் திருப்பி அனுப்பப்படும் குடிமக்களை ஏற்க கொலம்பியா முன்வந்தது. இதனால் மோதல் முடிவுக்கு வந்து இரு நாடுகள் இடையே மீண்டும் விமான சேவை தொடங்கியது.

அமெரிக்காவில் இருந்து கொலம்பிய மக்களை அழைத்து வர 2 ராணுவ விமானங் களை கொலம்பிய அரசு அனுப்பியது. அந்த விமானங்கள், 200-க்கும் மேற்பட்ட கொலம்பியாவை சேர்ந்த புலம்பெயர்ந்தவர்களை ஏற்றிக் கொண்டு தலைநகர் போகோட்டாவை வந்தடைந்தது.

## கனடா பிரதமர் தேர்வில் இந்திய வம்சாவளி பெண் போட்டி!



கனடா பிரதமர் தேர்வில் இந்திய வம்சாவளி பெண்ணான ரூபி தல்லா போட்டியிடவுள்ளார் என சர்வேதேச வட்டாரங்களில் இருந்து செய்தி வெளிவந்துள்ளன.

கனடா பிரதமர் பதவியில் இருந்து ஜஸ்டின் ட்ரூடோ விலகியதையடுத்து புதிய பிரதமர் வருகிற மார்ச் மாதம் தேர்வு செய்யப்படுகிறார். இதில் பலர் களத்தில் குதித்துள்ளனர்.

இந்த நிலையில் கனடா பிரதமர் பதவிக்கு போட்டியிடுவதாக இந்திய வம்சாவளி பெண் எம்.பியான ரூபி தல்லா அறிவித்துள்ளார். டாக்டரான அவர் தொழில் அதிபராகவும் இருந்து வருகிறார். ஆளும் லிபரல் கட்சியை சேர்ந்த ரூபி தல்லா மூன்று முறை எம்.பியாக இருந்து உள்ளார்.

இதற்கிடையே ரூபி தல்லா கூறும்போது, கனடாவில் 5 இலட்சம் பேர் சட்டவிரோதமாக வசித்து வருகின்றனர். இது ஏற்றுக்கொள்ள முடியாதது. புலம்பெயர்ந்தோர் நம் நாட்டை மகத்தானதாக கட்டியெழுப்ப உதவியிருப்பதை நன்கு அறிவேன். ஆனால் மனிதர்கள் கடத்தி வரப்படுவதை நாம் தடுக்க வேண்டும். கனடாவில் சட்டவிரோதமாக வசிக்கும் ஒவ்வொருவரையும் நான் நாடு கடத்துவேன். இப்போது தொடங்கி கனடா மீண்டு வருகிறது என்றார்

## உடுப்பிட்டி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அமைப்புக்களால் பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றத்தில் கடந்த வருடம் மே மாதம் 5 ஆம் திகதி வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

இந்த வழக்கு பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றத்தில் நீதிவான் முன்னிலையில் இன்று புதன்கிழமை மீண்டும் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இதன்போது மனுதாரர்கள் சார்பில் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் முன்னிலையானார்.

இன்று குறுக்கு விசாரணை நிறைவடைந்த நிலையில் எழுத்து மூல சமர்ப்பணத்துக்காக வழக்கு எதிர்வரும் மார்ச் 6 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

## கைதான...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வைக்குமாறு மல்லாகம் நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது .

காங்கேசன்துறைக்கும் பருத்தித்துறைக்கும் இடைப்பட்ட கடற்பரப்பினுள் படகொன்றினுள் அத்துமீறி நுழைந்து மீன்பிடியில் ஈடுபட்ட 13 இந்திய மீனவர்களையும் கடற்படையினர் நேற்று செவ்வாய்க்கிழமை அதிகாலை கைது செய்ய படகினுள் ஏறிய கடற்படையினருடன் படகில் தப்பிச் செல்ல முற்பட்ட இந்திய மீனவர்களின் படகின் மீது இலங்கை கடற்படையினர் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டு படகில் இருந்த 13 போரை யும் கைது செய்தனர். கைது செய்யப்பட்ட 13 பேரில் இருவர் துப்பாக்கிச்சூட்டுக்கு இலக்காகி காயமடைந்த நிலையில், அவர்கள் இருவரையும் காங்கேசன்துறை பொலிஸார் ஊடாக யாழ் . போதனா வைத்தியசாலையில் கடற்படையினர் சிகிச்சைக்காக அனுமதித்தனர்.

ஏனைய 11 மீனவர்களையும் நீரியல் வளத்துறை அதிகாரிகள் ஊடாக மல்லாகம் நீதவான் நீதிமன்றில் முற்படுத்திய நிலையில் 11 பேரையும் எதிர்வரும் 10ஆம் திகதி வரையில் விளக்கமறியலில் வைக்குமாறு மன்று உத்தரவிட்டது அதேவேளை துப்பாக்கிச்சூட்டுக்கு இலக்காகிக் காயமடைந்த இரண்டு மீனவர்களும் யாழ் . போதனா வைத்தி யசாலையில் தொடர்ந்து சிகிச்சை பெற்று வருகின்றனர்.

## எதிரணிகள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கட்டியெழுப்பும் நோக்கில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தலைமையில் எதிர்க்கட்சியைச் சேர்ந்த கட்சித் தலைவர்கள் இன்று கலந்துரையாடலில் ஈடுபட்டனர். இந்தச் சந்திப்பில் நாடாளுமன்ற உறுப்பினர்களான மனோ கணேசன், பழனி திகாம்பரம், அனுராத ஜயரத்ன, இரா.சாணக்கியன, ஜே.சி. அலவத்துவல, அஜித் பி. பெரேரா, ரவி கருணாநாயக்க உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

## அமெரிக்கா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வீரதுங்க தெரிவித்துள்ளார். இணைய ஊடகமொன்றுக்கு வழங்கிய நேர்காணலின்போதே அவர் இந்தத் தகவலை வெளியிட்டுள்ளார். ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னர் நாட்டைவிட்டு வெளியேறிய பஸில் ராஜபக்ஷ், மீண்டும் எப்போது நாடு திரும்புவார் என எழுப்பப் பட்ட கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

“ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியை பஸில் ராஜபக்ஷ நினைத்தால் நிச்சயம் மீண்டெழ வைக்க முடியும். எனினும், அவர் அரசியலில் இருந்து ஒதுங்கிவிட்டார். பஸில் ராஜபக்ஷ மீண்டும் அரசியலுக்கு வருவதை ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவும் விரும்பவில்லை. மஹிந்த ராஜபக்ஷ மீது அநுரகுமார திஸாநாயக்க மதிப்பு வைத்துள்ளார். எனவே, மஹிந்தவை வீட்டைவிட்டு அவர் அனுப்பமாட்டார். அப்படி அனுப்பினாலும் பொருத்தமான வீடொன்று வழங்கப்படவுள்ளது.” -என்றார்

# அரிசி வர்த்தகர்கள் பணிப்புறக்கணிப்புக்கு முஸ்தீபு



கொழும்பு, ஜன 29

அரிசி தொடர்பான பிரச்சினைக்குரிய நிலைமைக்கு தீர்வுகளை வழங்குமாறு அரசாங்கத்தை வலியுறுத்துவதற்காக அரிசி சந்தையில் இருந்து விலகி போராட்டத்தில் ஈடுபட புறக்கோட்டை அரிசி வியாபாரிகள் தீர்மானித்துள்ளனர்.

நுகர்வோர் விவகார அதிகாரசபை அதிகாரிகளின் சோதனைகள் அரிசி வியாபாரத்திற்கு ஒரு தடையாக இருப்பதாகவும், அரசாங்கம் அரிசி பிரச்சினைக்கு சரியான தீர்வை வழங்கியவுடன் நுகர்வோர் விவகார அதிகாரசபை அந்த சோதனைகளை செயல்படுத்த வேண்டும் என்று வர்த்தகர்கள் கருதுவதாகவும் புறக்கோட்டை அரிசி வியாபாரிகள் கூறுகின்றனர (ஐ)

# ஹபரணை விபத்தில் 16 பேர் காயம்





கொழும்பு, ஜன 29

ஹபரணை - மின்னேரிய வீதியின் 07வது மைல்கல் பகுதியில் இரண்டு பேருந்துகள் நேருக்கு நேர் மோதி விபத்துக்கு உள்ளானதில், 16 பேர் காயமடைந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். தனியார் பேருந்தும் இலங்கை போக்குவரத்து சபைக்குச் சொந்தமான பேருந்துமே புதன்கிழமை (29) பிற்பகல் 11 மணியளவில் விபத்தில் சிக்கியுள்ளன. இந்த விபத்தில் இலங்கை போக்குவரத்து சபை பேருந்தில் பயணித்த 12 பேரும், தனியார் பேருந்தில் பயணித்த 4 பேரும் காயமடைந்து பொலன்னறுவை பொது மருத்துவமனையிலும், ஹபரணை பிரதேச மருத்துவமனையிலும் அனுமதிக்கப்பட்டுள்ளனர். காயமடைந்தவர்களில் இரண்டு பேருந்துகளின் சாரதிகளும் அடங்குவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தனியார் பஸ், சிறிபுர பகுதியில் மரண வீடொன்றுக்கு கட்டுநாயக்கவிலிருந்து சென்றுகொண்டிருந்ததாக விசாரணைகளின் ஊடாக கண்டறியப்பட்டுள்ளது. (ஐ)

# வீட்டில் இருந்து வெளியேறுமாறு அறிவித்த அரசு



கொழும்பு, ஜன 29

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவிற்கு வழங்கப்பட்ட வீட்டை அவர், ஒழுக்கத்துடன் கையளித்து விட்டு செல்ல வேண்டும் என அமைச்சரவை பேச்சாளர், அமைச்சர் நளிந்த ஜெயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

வாராந்த அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் ஊடகவியலாளர் மாநாட்டில் நேற்று உரையாற்றும் போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் கூறுகையில், “வீட்டை கையளித்து விட்டு செல்லுமாறு நாம் அரசாங்கம் என்ற வகையில், நாடாளுமன்றத்தில் கூறியிருந்தோம். சந்திரிக்கா குமாரதுங்க, மைத்திரிபால, மற்றும் மகிந்த ராஜபக்ச ஆகியோரிற்கு புதிதாக ஒரு சட்டம் தேவையில்லை.

இதற்கு முன்னர் இந்த இல்லத்தைப் பயன்படுத்திய முன்னாள் ஜனாதிபதியின் பாரியார் ஹேமா பிரேமதாச அதனை ஒப்படைத்துவிட்டுச் சென்றார். அதன் பின்னர் கோட்டாபய ராஜபக்சவும் அவ்வாறே செயற்பட்டிருந்தார்.

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க இதனைப் பயன்படுத்தியிருக்கவில்லை. இவர்களும் முன்னாள் ஜனாதிபதிகளே. அவ்வாறிருக்கையில் அவர்களுக்கொரு சட்டம், இவர்களுக்கொரு சட்டம் இல்லை.

மைத்திரிபால சிறிசேனவின் வீடு தொடர்பில் உயர் நீதிமன்றமும் தீர்ப்பு வழங்கியுள்ளது. பொருத்தமான வீடு தொடர்பில் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே, இவை அனைத்தையும் பார்த்து அவர்கள் தீர்மானம் எடுத்திருக்க வேண்டும் அல்லவா?

தேவை என்றால் மேலும் பல விடயங்களை கூற முடியும். இந்த வீட்டை தொடர்ந்தும் அனுபவிப்பதற்காக தாம் அதிகாரத்தில் இருந்த போது வீட்டை புனரமைத்துள்ளதாகவும் கூறமுடியும்.

அத்துடன், தமது ஆட்சி காலத்தில் அரச பணத்தை செலவு செய்து தமது வாழ்நாட்களின் நலனுக்காக உருவாக்கி கொண்ட வீடாக உள்ளது.

குறித்த வீட்டை புனரமைப்பதற்கு 2021ஆம் ஆண்டிலிருந்து 2023ஆம் ஆண்டுவரை மாத்திரம், 472.52 மில்லியன் ரூபாவை செலவு செய்துள்ளனர்.

கட்டடத்தின் உபகரணங்களுக்காக 140 மில்லியன் ரூபாவும், சிவிலிங் வேலைகளுக்காக 30.5 மில்லியன், வடிவமைப்பு உற்பத்திக்காக 32.17 மில்லியன், மின்சார உபகரணங்களுக்கு 38.9 மில்லியன், பலகை கொள்வனவு 36.3 மில்லியன், தரைக்கான மர வேலைப்பாடுகளுக்கு (மரத்தளம்) 35.17, க்ரனைட்டுக்கு 15.8 குளிரூட்டி கட்டமைப்புக்கு மற்றும் 46.9 மில்லியன் என செலவு செய்துள்ளனர்.

இதன் மொத்தம் 472.52 மில்லியன் ரூபாவாகும். உண்மையிலேயே இது அரசாங்கத்திற்கு பாரமாகும். இயலுமானவரையில் வீட்டை நாங்கள் அரசாங்கத்திடம் கையளிக்குமாறு கூறியுள்ளோம்.

கழுதம் அனுப்பினால் தான் வெளியேறுவோம் என்றும் சிலர் கூறிக் கொண்டிருக்கின்றனர். இவர்கள் சாதாரண மக்கள் அல்ல. முன்னாள் ஜனாதிபதிகளாவர். எனவே இவர்கள் இவ்வாறு செயற்படுவது அவர்கள் வகித்த பதவிக்கு தகுதியானதல்ல.

எனவே பூதங்களைப் போன்று



இல்லங்களைப் பிடித்துக் கொண்டிருக்காமல் ஒழுக்கமாக வெளியேறிவிட வேண்டும்.

மேலும், முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவும் குறித்த வீட்டை அரசாங்கத்திற்கு கையளிப்பார் என நாம் எதிர்பார்க்கின்றோம்” என குறிப் பிட்டு ள்ளார். (ஐ)







இந்நாளிதழ் நல்லூர், இல - 68, Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 29.01.2025 இல் வெளியிடப்பெற்றது.